# 2012ம் ஆண்டின் இலக்கம் 21ன் உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

# 2012ன் 22ம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தல் (திருத்தச்) சட்டம் பற்றிய அறிமுகம்

ஸ்ரீயாணி விஜேசுந்தர
மஞ்சுள கஜநாயக்க

| | | |
|---|---|---|
| வெளியீடு | : | மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் |
| கணனி வடிவமைப்பு | : | ராஜேந்திரன் லக்ஷ்மி |
| பக்க வடிவமைப்பு | : | சுஜித் குமார |


மாற்றுக்கொள்கை நிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பொன்றாவதோடு பிரதானமாக அரசாக்கம், முரண்பாடுகளை தீர்த்தலும் அதனுடன் இணைந்த முரண்பாடுகளின் பால் அவதானம் செலுத்தும். மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் 1996ம் ஆண்டு அமைக்கப்பட்டதற்கான காரணம் பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாசனைக்கான சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கையை கொண்டுள்ளது. பொது மக்களின் கொள்கை விமர்சண ரீதியாக விமர்சிக்கப்படல், மாற்று வழிகளை இணங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பாக ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அர்ப்பணித்துள்ளது.

USAID FROM THE AMERICAN PEOPLE

CPA CENTRE FOR POLICY ALTERNATIVES


| | | |
|---|---|---|
| .விலாசம் | : | 24/2, 28ம் ஒழுங்கை, |
| | | ப்.்.ளவர் வீதி, கொழும்பு – 07. |
| தொலைபேசி | | 011-2565304-6 |
| தொலைநகல் | : | 011-4714461 |
| மின்னஞ்சல் | : | www.cpalanka.org |
| | | sriyanie@cpalanka.org |

## 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபை சட்டத்தில் சேர்க்கப்பட்ட புதிய திருத்தங்கள் பற்றிய அறிமுகம்

**ஸ்ரீயாணி ஜயசுந்தர**

ஏதாவது ஒரு சட்டம் அல்லது விதி திருத்தப்படுவதற்கான பல காரணங்கள் உண்டு.

- நடைமுறையில் உள்ள சட்டத்தில் அதாவது தாய்ச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளை அல்லது தவறுகளை நீக்கும் பொருட்டு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- முழு நாட்டிற்கும் ஏற்புடைய வகையில் ஒரே வகையான சட்டமுறைமையை உறுதிப்படுத்துவதற்கு நிர்வாக மற்றும் தீர்மானங்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் பொதுமக்கள் பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதி செய்தல்.
- மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஒரு வெற்றிகரமான முறைமையை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

இதற்கமைய பொதுவாக சனசமூகத்தின் காலத்தின் தேவையை அடிப்படையாகக் கொண்டு சட்டத்தை அமுலாக்கும் பொருட்டு அல்லது சீரமைக்கும் பொருட்டு குறிப்பிட்டதொரு சட்டத்தை அல்லது விதியை திருத்துவது மேற்படி திருத்தங்களின் நோக்கமாகும்.

இலங்கையின் உள்ளூராட்சிக் கட்டமைப்பின் கீழுள்ள பிரதேச சபைகள் தொடர்பான சட்டமாகிய 1987 ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் ஏற்கனவே 3 தடவை திருத்தங்களுக்கு ஆளாகியுள்ளது. 1993 ஆண்டின் 34ம் இலக்க தாய்சட்டத்தின் 132 வது உறுப்புரை[1] மற்றும் 1999ம் ஆண்டின் 14ம் இலக்க தாய்சட்டத்தின் 9A மற்றும் 9B ஆகிய உறுப்புரைகள்[2] மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21ம் இலக்க தாய் சட்டத்தின் 4வது உறுப்புரை 133வது உறுப்புரை மற்றும் 169ஆவது உறுப்புரைகள் திருத்தப்பட்டுள்ளன.

இவற்றில் 2012ம் ஆண்டின் 21ம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட உள்ளூராட்சித் துறையினதும் நிர்வாகத்தினதும் விசேட கவனத்தை ஈர்த்து மேற்கொள்ள வேண்டிய பல விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் தற்றுணிவின் படி வர்த்தமானிப் பத்திரிகையில் அவற்றை பகிரங்கப்படுத்தி, அதன் பின்னர் 2012ம் ஆண்டின் 21ம் இலக்க உள்ளூராட்சி விசேட ஏற்பாடுகள் சட்டம் (திருத்தம்) ஏற்கனவே அமுலில் இருந்து வருகிறது.

மேற்படி திருத்தங்களுக்கு அமைய அமுல்படுத்தப்பட உள்ள ஏற்பாடுகள் பற்றி உள்ளூராட்சி அதிகார சபைகளின் முதல்வர்கள், பிரதிநிதிகள், உத்தியோகத்தர்கள் மத்தியில் கலந்துரையாடப்படும், பல்வேறு விவாதங்களுக்கு உள்ளாக்கப்படும் கருத்து வேறுபாடுகளுக்கு நுழைவாயிலாக அமைந்த ஓர் விடயம் உண்டு. மேற்படி திருத்தங்கள் பற்றி அவர்களுக்கு தெளிவான பரந்துபட்ட விளக்கத்தை அளிப்பது ஒரு சமூகப் பணி என கருதப்படுகிறது.

---

1. திருத்தம் - 1 1993ம் ஆண்டின் 34ம் இலக்க தாய்சட்டத்தின் 132வது உறுப்புரை. தவிசாளர் அல்லது உப தவிசாளரின் வதிவிடங்களுக்கு வழங்கப்படுகின்ற தொலைபேசி வசதிகளை நிறுவுதல் மற்றும் பேணுதல் தொடர்பான செலவுகள் என திருத்தப்பட்டுள்ளது.

2. திருத்தம் - 2 1999ம் ஆண்டின் 14ம் இலக்க சட்டத்தின் 9வது பிரிவை உடனடுத்து 9 "அ" உப பிரிவு 4 அடங்களாக மற்றும் 9 "ஆ" உப பிரிவு 3 அடங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளது. இப் புதிய பிரிவுகளின் மூலம் பிரதேச சபைகளின் இடப்பரப்பு எல்லைகளையும் உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் வேறுபடுத்துவதற்கும் பிரதேச சபையை கலைத்து மாற்றீடு செய்வதற்கும் அமைச்சருக்கு உள்ள அதிகாரம் விளக்கப்பட்டுள்ளது.

2012ம் ஆண்டின் 21ம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களில் குறிப்பாக, இலங்கையின் உள்ளூராட்சி அதிகார சபைகள் கட்டமைப்பின் பெரும்பான்மையினை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதேச சபைகள் தொடர்பாக இவ் அறிமுகத்தின் போது கூடிய கவனம் செலுத்தப்படுகிறது.

## பிரதான நியதிச் சட்டத்தின் 4வது உறுப்புரையை திருத்துதல்

1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் முதலாவது பகுதியின் பிரதேச சபைகளை ஸ்தாபித்தல் பற்றிய ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேற்படி உறுப்புரையின் 4(1) வாசகத்தில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் மேற்படி 2012ம் ஆண்டின் 21ம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் திருத்தப்பட்டவாறான 4(1)(அ) மற்றும் 4(1)(ஆ) மற்றும் 4(2)(1)என அடையாமிடப்பட்டு மேலதிக சில ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

திருத்தத்திற்கு முன்னர் தாய்ச் சட்டத்தின் திருத்தம் பற்றிய ஏற்பாடுகள் மற்றும் 2012ம் ஆண்டின் 21ம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரதேச சபைகளின் கட்டமைப்புப் பற்றி உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை மீளாய்வு செய்து பார்க்கையில் உண்மையில் உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வெற்றிகரமான முறையை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, உள்ளூராட்சி அதிகார சபைப் பிரதேசங்களின் பிரதிநிதித்துவத்தை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கு, மேற்படி திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அதனூடாக ஜனநாயக ரீதியான நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய தீர்மானங்களை மேற்கொள்ளும் செயற்பாட்டை பிரதேச மட்டத்தில், மக்களுக்கு பயனுறுதி வாய்ந்த முறையில் அவர்கள் பங்கேற்பதற்கு கூடிய சந்தர்ப்பங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு மேற்படி திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

## பிரதான நியதிச் சட்டத்தின் 133வது உறுப்புரையை திருத்துதல்

இதன் கீழ் பிரதேச சபை நிதியில் இருந்து மேற்கொள்ளப்படும் சகல செலவினங்களினதும் காசோலைகள் அல்லது கட்டளைகள் தொடர்பாக சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இதற்கமைய தாய்ச் சட்டத்தின் 33வது உறுப்புரையின் கீழ் விசேடமாக பிரதேச சபையின் அதிகாரம் கையளிக்கப்பட்ட இரு அதிகாரிகளுக்கு காசோலைகளில் கையளித்து வைப்பதற்கான அதிகாரம் வழங்கப்படுகிறது. இதற்கான அங்கிகாரத்தை **உள்ளூராட்சி உதவி ஆணையாளர்** வழங்க வேண்டும்.

எவ்வாறாயினும் தாய்ச் சட்டத்தின் 133வது உறுப்புரையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நீக்கி அதற்கு பதிலாக பின்வரும் ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கு 2012ம் ஆண்டின் 21ம் இலக்கச் சட்டம் வழிவகுத்துள்ளது.

"பிரதேச சபைக்குரிய பிரதேச சபை நிதியத்தின் கீழ் செலவழிக்கப்படும் செலவுகளுக்கான காசோலைகள் அல்லது கட்டளைகள்,**ஆணையாளரின்** அங்கிகாரத்தின் கீழ், மேற்படி விடயம் தொடர்பாக பிரதேச சபையினால் குறிப்பாக அதிகாரமளிக்கப்பட்ட,**சபையில் தவிசாளர் அல்லாத**வேறு இரு உத்தியோகத்தர்கள் கையொப்பமிட வேண்டும். மேற்படி நிதி எந்த வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளதோ, அந்த வங்கி மேற்குறிப்பிட்டவாறு அங்கிகரித்து கையெழுத்திடப்பட்ட சகல காசோலைகளுக்கும் கட்டளைகளுக்கும் உரித்தான பணத்தொகையை மேற்படி நிதியத்தில் இருந்து செலவு செய்ய வேண்டும்."

உண்மையில் இத் திருத்தங்கள் ஏன் செய்யப்பட்டுள்ளன என்பதை விமர்சன ரீதியாகவும் புத்திசாலித்தனமாகவும் ஆராய வேண்டும். மேற்படி திருத்தத்திற்கு முன்னர் சகல பிரதேசச் சபைகளினதும் பிரதம நிறைவேற்று அதிகாரியான தவிசாளர் செயற்பட்டதோடு அவரும் காசோலைகளில் கையெழுத்திட்டார். காசோலைகளில் கைச்சாத்திடும் ஏனைய இரண்டு

உத்தியோகத்தர்களை அங்கிகரிக்கும் அதிகாரம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனவே, பெரும்பான்மை உள்ளூராட்சி அதிகார சபைகளின் சீரற்ற செலவுகளும் நிதி நிர்வாகமும் உள்ளக நிர்வாகத்தில் ஏற்பட்டிருந்தமை தொடர்பான பல்வேறு குறைபாடுகள் கணக்காய்வுகளின் போது சுட்டிக்காட்டப்பட்டமையால்,சில உள்ளூராட்சி அதிகார சபைகளின் கணக்காய்வு மிகை விதிப்புகளுக்கு ஆளானமையையும் கருத்திற் கொண்டு மேற்படி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கமைய விசேடமாக பிரதேச சபைகளின் செலவுகளை பொருத்த வரை வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வதற்கும் அது தொடர்பான நிதி நிர்வாகத்தையும் நிதிக் கட்டுப்பாட்டையும் பேணுவதற்கும் மேற்படி திருத்தங்கள் மிக முக்கியமானவை என கவனத்திற் கொள்ள வேண்டும். அதேசமயம் காசோலைகளுக்கு கையெழுத்திடும் அதிகாரம் பிரதேச சபை தவிசாளர் அல்லாத வேறு இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் பிரதேச சபை தவிசாளர் கணக்காய்வின் போதும் மிகை விதிப்புகளின் போதும் பிரதேச சபையின் தவிசாளர் விடுதலைபெற முடியாது. [3]பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதிகள் 4 மற்றும் 5 தொடர்பில் விசேட அவதானத்தை செலுத்துகின்றேன். நிறைவேற்று உத்தியோகத்தர் என்ற வகையில் உரிய கண்காணிப்பை மேற்கொள்ளக் கூடியவராகவும் நல்லாட்சியைக் கட்டியெழுப்பக் கூடியவராகவும் செயற்படுவதற்கு இத் திருத்தச் சட்டம் துணைபுரிகின்றது என்பதை நாம் மறந்துவிடலாகாது.

## பிரதான நியதிச் சட்டத்தின் 169வது உறுப்புரையை திருத்தி அமைத்தல்

பிரதேச சபைகளை மேற்பார்வை செய்தல் நிர்வகித்தல் என்பன தொடர்பாக விளக்கும் IV வது பகுதியில் உள்ளடங்கியுள்ள 169ம் வது உறுப்புரையின் மூலம் சபையின் வரவு செலவு அறிக்கை தொடர்பான தவிசாளரின் அதிகாரம் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. தாய்ச் சட்டம் இது தொடர்பாக பின்வருமாறு கூறுகிறது.

"குறிப்பிட்டதொரு வரவுசெலவு அறிக்கை அல்லது நிரப்பு வரவுசெலவு அறிக்கையின் உள்ளடக்கப்பட வேண்டிய சகல விடயங்களும் அல்லது ஒரு சில விடயங்கள் பிரதேச சபையினால் திருத்தப்பட்டால், அல்லது நிராகரிக்கப்பட்டால் அல்லது மேற்படி விடயத்திற்கு சில விடயங்கள் சேர்க்கப்பட்டால்,குறிப்பிட்ட பிரதேச சபையின் அத்தகைய தீர்மானத்திற்கு தவிசாளர் உடன்படாவிட்டால், தொடர்ந்தும் அதனை கவனத்திற்கொள்வதற்கு மேற்படி வரவு செலவு அறிக்கை அல்லது மிகை நிரப்பு அறிக்கை தவிசாளரினால் பிரதேசச் சபைக்கு மீள சமர்ப்பிக்கப்பட வேண்டும். குறிப்பிட்டதொரு வரவுசெலவு அறிக்கை அல்லது மிகை நிரப்பு அறிக்கை அவ்வாறு மீளச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இரு வாரங்களுக்குள் அவற்றை குறிப்பிட்ட பிரதேச சபை அங்கீகரிக்காத பட்சத்தில் மேற்படி வரவுசெலவு அறிக்கை அல்லது குறை நிரப்பு அறிக்கை பிரதேச சபையினால் அங்கீகரிக்கபடா விட்டாலும் மேற்படி பிரதேச சபை அவ்வறிக்கைகளை உசிதமான முறையில் அங்கீகரித்த வரவு செலவு அறிக்கையாகவோ குறை நிரப்பு அறிக்கையாகவோ கருத வேண்டும்."

பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதிகள் 4 மற்றும் 5

[3]பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதிகள் 4 மற்றும் 5 தொடர்பில் விசேட அவதானத்தை செலுத்துகின்றேன்

4. பிரதேச சபையொன்றின் கணக்கு உத்தியோகத்தர் தவிசாளரேயாதல் வேண்டும். அத்துடன் இந்த விதிகளுக்கும் உள்ளூராட்சி அமைச்சரால் வழங்கப்படக்கூடிய அறிவுறுத்துரைகளும் உட்பட்டு பிரதேச சபையொன்றின் நிதிசார் மற்றும் கணக்கிடல் தொழிற்பாடுகள் யாவும் அவருடைய பொது முகாமைத்துவத்தினதும் மேற்பார்வையினதும் கீழ் இருத்தல் வேண்டும்.

5. தவிசாளரின் கடமைகளுள்-

I. பிரதேச சபையிலும் அதன் துணை அலுவலகங்களிலும் பொதுமான நிதிக் கட்டுப்பாட்டுமுறையினைத் தாபித்தல்.

II. நிகழ்ச்சித் திட்டங்களின் பிரகாரம், சபையின் நிதிச் செயற்பாடுகளைச் செலவின வகைப்பாட்டின் மூலம் செவ்வனே திட்டமிடலும் நிதி ஒழுங்கு விதிகளுக்கேற்ப நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுவதை உறுதிபடுத்துதலும்.

III. செலவினம், வருமானச் சேகரிப்பு நோக்கில் போதுமான உள்ளகச் செவ்வையார்த்தலை பேணுதல்.

IV. நாளது வரையான தகவல் வழங்கீட்டினை உறுதிப்படுத்தும் முகாமை முறையொன்றை அமுலாவதை கவணித்தல்.

V. அபிவிருத்தித் திட்டத்திலும் வரவு செலவுத் திட்டத்திலும் அடங்கப்பெற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மன நிறைவு கொள்ளத்தக்கவாறு நடைமுறைப்படுவதனையும் அவற்றினின்று சேரும் நன்மைகள் செலவினத்துக்கு தகுந்தவாறு அமைவதனையும் பார்த்துக் கொள்ளல்.

VI. சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் பிரதேச சபைக்கு வருமதியான வரிகளையும் ஏனைய வருமானங்களையும் சரியான நேரத்தில் சேகரித்து அவைகள் பற்றிய கணக்குகளைப் பே ணுவதை உறுதிப்படுத்தல்.

VII. நிதி, களஞ்சியக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வு முறையொன்றை பேணுவதை உறுதிப்படுத்தல்.

VIII. பிரதேச சபையின் காசு, நிலையான சொத்துக்கள் என்பவற்றின் ஏமத்தின் பொருட்டுத் தேவையான நடவடிக்கை எடுத்திருப்பதை உறுதிப்படுத்துதல்.

IX. நிகழ்ச்சித் திட்டங்களுக்கேற்ப வகைப்பாடு செய்யப்பெற்ற வருமானச் செலவினக் கூற்றொன்றை ஒவ்வொரு மாதத்திலும் சபைக்குச் சமர்ப்பிப்பதை உறுதிப்படுத்தல்.

X. மாதாந்தம் வங்கிக்கணக்கிணக்கம் தயாரிக்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.

XI. பெயர்ச்சியுள்ள காசு தொடர்பிலும் ஏனைய மதிப்பு வாய்ந்த பண்டங்கள் தொடர்பிலும் பொருத்தமான காப்புறுதி உத்தரவாதங்களைப் பெற்றுக் கொள்வதனைக் கவனித்தல்.

XII. காசு, களஞ்சியப் பொருள் முதலியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ள உத்தியோகத்தரிடமிருந்து போதுமான பிணைப்பணங்களைப் பெற்றுக்கொண்டமையை உறுதிப்படுத்துதல்.

XIII. வருடாந்த, வரவு செலவுத்திட்டம் ஒன்றும் அபிவிருத்தித் திட்டமொன்றும் சபையின் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுவதனை உறுதிப்படுத்தல் ஆகியன இடம்பெறுகின்றன.

2012ம் ஆண்டின் 21ம் சட்டம் அறிமுகப்படுத்திய திருத்தத்தின் மூலம் 169வது உறுப்புரை பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

"அவ்வாறாயினும், சபையின் உத்தியோகப்பூர்வ கால எல்லை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளின் பின்னர், தவிசாளர், எத்தகையதோர் சந்தர்ப்பத்திலும் சபையில் சமர்பிக்கும் வரவுசெலவு அறிக்கை அல்லது குறைநிரப்பு வரவுசெலவு அறிக்கை தொடர்பாக இக் கட்டளைச் சட்டத்தின் 168வது 169வது உறுப்புரைகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொண்ட பின்னர் மேற்படி வரவுசெலவு அறிக்கை அல்லது குறை நிரப்பு வரவு செலவு அறிக்கையின் சகல விடயப் பொருட்களும் அல்லது ஏதாவது ஒரு விடயப் பொருள் அல்லது சபை ஏதாவது ஒரு சிறு மாற்றத்தை ஏற்படுத்தினால் அல்லது நிராகரித்தால் அல்லது ஏதாவது ஒரு விடயப் பொருள் சேர்க்கப்பட்டால், சபையின் அத்தகையதோர் தீர்மானத்திற்கு தவிசாளர் உடன்படாவிட்டால், அவர் மேலும் அவ் வரவுசெலவு அறிக்கையை கவனத்திற் கொள்ளுமாறு மீண்டும் சபையில் சமர்ப்பிக்கலாம். அது மீண்டும் இரண்டாவது முறையாக சபையில் சமர்ப்பிக்கப்பட்டு இரு வாரங்களின் பின்னர் அது அங்கீகரிக்கப்படாவிட்டால் மேற்படி இரண்டு வாரங்கள் கடந்த பின்னர் தவிசாளர் தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்ததாகக் கருதப்படும்.

இதற்கமை 169வது உறுப்புரைக்கு 2012ம் ஆண்டின் 21ம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் சேர்க்கப்பட்ட திருத்தம் ஏதோ ஒரு வகையில் வி சேட நிலை மையை சுட்டிக்காட்டுகின்றது. அதாவது தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட தவிசாளர் தனது பதவியை செயற்படுவதற்கு உரித்தான நான்கு ஆண்டு காலம் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

உண்மையில் மேற்படி திருத்தங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் உள்ளூராட்சி அதிகார சபையின் தவிசாளருக்கு

சவாலாக அமைய வேண்டுமானால் அவர் மேற்படி அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் பிரதேச சபைச் சட்டத்தின் 168வது உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஆண்டு வரவு செலவு அறிக்கையை சபையில் சமர்ப்பிக்கும் போது வெளிப்படைத் தன்மை வாய்ந்ததாக சமத்துவத்தையும் பங்கேற்பையும், திட்டமிட்ட முறைமையினையும் அனுசரிப்பதன் மூலம் இச் சவால்களை வெற்றிகரமாக எதிர்நோக்க முடியும். குறிப்பாக ஆண்டு வரவு செலவு அறிக்கையின் மூலம் நிதி ஏற்பாடுகளை ஒதுக்கிடும் போது கட்சி பேதமின்றி முழு அதிகாரச் சபை பிரதேசமும் உள்ளடக்கக் கூடிய வகையில் திட்டங்களையும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் குழு உணர்வுடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் வருடாந்த வரவு செலவு அறிக்கை தொடர்பாக பொதுச் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவது கடினமல்ல என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். இதற்கமைய வரவு செலவு அறிக்கை தொடர்பாக தவிசாளருக்குள்ள அதிகாரங்களும் கட்டுப்பாடுகளும் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய வருடாந்த வரவு செலவு அறிக்கை உரிய நிதி முகாமைத்துவதத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட ஆண்டு நிதித் திட்டம் என்பதையும், அதனூடாக பொது மக்களின் கருத்தை பிரதிபலிப்பதற்கும் பொது மக்களின் அபிலாஷைகளை உயர் மட்டத்தில் செயற்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்ட ஓர் நிர்வாக ஆவணம் என்றும் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மூலம் இதனை தீர்மானிக்கக் கூடியதாக உள்ளது. அதே சமயம் வருடாந்த வரவு செலவு அறிக்கை தயாரிப்பது தொடர்பில் உள்ளூராட்சி நிறுவனங்களை ஸ்தாபிக்கும் சட்ட திட்டங்கள் மூலமும் ஒழுங்குவிதிகள் பிரமாணங்கள் மூலமும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு உள்ளூராட்சி அதிகார சபைகளின் முதல்வர்கள் செயற்பட்டால் மேற்படி திருத்தங்கள் தமது பதவிகளுக்கோ அல்லது அதிகாரங்களுக்கோ சவாலாக அமைய மாட்டாது. அதே சமயம் நிறுவனத்தின் தொலை நோக்கை அண்மிக்கக் கூடிய வகையிலும் தமது வெற்றிகளை நோக்கிச் செல்லக்கூடிய தெளிவான பாதை என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இணைப்பு 1: Act N0. 34 of 1993

248397

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்**
**பாராளுமன்றம்**

---

## 1993 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டம்

*[1993, ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

*1993, ஆகஸ்ட் மாதம் 13 ஆந் தேதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30 தபாற் செலவு ரூபா : 1·00

**1993 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டம்**

[1993, ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—இ 22/92

**1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—


1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டம் எனஎடுத்துக்காட்டப்படலாம். — சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 132 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஒ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— — 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 132 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(ஓஓ) தவிசாளரினதும், உபதவிசாளரினதும் வதிவிடங்களில் அலுவலகமுறையான தொலைபேசி வசதிகளை நிறுவுவதிலும் அத்துடன் பேணுவதிலும், பிரதேச சபையால் உறப்படும் எல்லாச் செலவுகளும்;".

3. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். — ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

இணைப்பு 2 : Act No. 14 of 19999



17 SEP 1999
NATIONAL ...
DOCUMENTATION ...

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

1999 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டம்

(1999, ஜுன் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1999, ஜுன் மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.
விலை: ரூபா 5.25 தபாற் செலவு: ரூபா 3.50

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வோக்ஸ் இல்லம், லோட்டஸ்றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

(ஈ) ஏதேனும் பிரதேச சபையை, அவ்விடத்தில் மாநகர சபையொன்றை அல்லது நகர சபையொன்றை அமைக்கும் நோக்கத்திற்காகக் கலைக்கலாம். மாநகர சபையொன்றை அமைக்கையில், அமைச்சர் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய மாநகர சபை எந்த இடப் பரப்பிற்காக அமைக்கப்படவுள்ளதோ அந்த இடப்பரப்பின் அபிவிருத்தியையும் அல்லது பொது வசதிகளையும் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

அத்துடன் நகர சபையொன்றை அமைக்கையில் அமைச்சர், நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

ஆயினும், இப்பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை எதுவும், அக்கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்ட உரிய பிரதேச சபை எதனதும் உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவடைந்ததன் பின்னர் வரை வலுவுக்கு வருதல் ஆகாது.

புதிய பிரதேச சபை ஏலவேயுள்ள சபையை அடுத்துறுவதாதல் வேண்டும்.

5ஆ. எந்தப் பிரதேச சபை கலைக்கப்பட்டதோ அந்தப் பிரதேச சபை எதனதும் இடத்தில் 5அ என்னும் பிரிவின்கீழ் ஏதேனும் புதிய பிரதேச சபை அமைக்கப்படுமிடத்து —

(அ) எந்தப் பிரதேச சபை இடப்பரப்புக்காக அல்லது அதன் ஏதேனும் பாகத்துக்காகக் கலைக்கப்பட்ட சபையானது அமைக்கப்பட்டதோ அந்தப் பிரதேச சபை இடப்பரப்பு அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பிலான எல்லா நோக்கங்களுக்காகவும், எந்தப் பிரதேசசபை இடப்பரப்புக்காகப் புதிய சபை அமைக்கப்பட்டதோ அந்தப் பிரதேச சபை இடப்பரப்பின் நிருவாக எல்லையினுள் அத்தகைய இடப்பரப்பு அல்லது அதன் பாகம் உள்ளடக்கப்படும்வரை, புதிய சபையானது அது அமைக்கப்பட்ட திகதியிலிருந்து கலைக்கப்பட்ட சபையை அடுத்துறுவதாதல் வேண்டும் ;

(ஆ) புதிய சபையின் நிருவாக எல்லைகளுக்குள் அமைந்திருப்பதான அத்தகைய கலைக்கப்பட்ட சபையின் எல்லா ஆதனமும், அத்துடன் அத்தகைய கலைக்கப்பட்ட சபையின் எல்லா உரிமைகள், தத்துவங்கள், கடமைகள், தனிகள், பொறுப்புக்கள், கடப்பாடுகள் என்பனவும் அவை புதிய சபையின் நிருவாக எல்லைகளுக்குள்ளான ஏதேனும் இடப்பரப்பைத் தொடர்புறுகின்றவரை, புதிய சபை அமைக்கப்பட்ட தேதியில் இருந்து புதிய சபைக்குக் கையாற்றப் பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) ஏதேனும் சட்டவாக்கத்தில் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையிலான, விதியிலான, ஒழுங்குவிதியிலான அல்லது துணைநிலைச் சட்டத்திலான அல்லது அதனைப் பின்பற்றி நிறைவேற்றப்பட்டனவான அல்லது வழங்கப்பட்டனவான ஏதேனும் ஆவணத்தில் அல்லது சாதனத்தில் கலைக்கப்பட்ட சபை பற்றியனவான எல்லாக் குறிப்பீடுகளும் புதிய சபையின் நிருவாக எல்லைகளுக்குள் உள்ளடக்கப்பட வேண்டியதான அத்தகைய கலைக்கப்பட்ட சபையின் நிருவாக எல்லைகளுக்குள்ளான ஏதேனும் இடப்பரப்பின் நோக்கத்திற்காக, அவை புதிய சபைக்கான குறிப்பீடுகள் என்றாற் போன்று பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

8307
28 OCT 1999
NATIONAL LIBRARY AND
DOCUMENTATION CENTRE

## 1999 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டம்

[1999 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.– 9. 24/95

## 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

1. இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன், அவை அச்சட்டத்தின் முறையே 9அ, 9ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :– 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தில் 9அ, 9ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

"பிரதேச சபைகளின் இடப்பரப்பு எல்லைகளை உம் உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் வேறுபடுத்துவதற்கும் பிரதேச சபைகளைக் கலைத்து மாற்றீடு செய்வதற்கும் அமைச்சருக்குள்ள தத்துவம்.

9அ. அமைச்சரானவர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், எந்த நேரத்திலும் –

(அ) ஏதேனும் பிரதேச சபை இடப்பரப்பு எல்லைகளை 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு ஒத்த முறையொன்றில் வேறுபடுத்தலாம் ;

(ஆ) ஏதேனும் பிரதேச சபைகளுக்கு 4 ஆம் பிரிவின் கீழ் தீர்மானிக்கப்பட்டதான உறுப்பினர்களின் எண்ணிக்கையை அப்பிரிவில் தரப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கு இணங்க வேறுபடுத்தலாம் ;

(இ) ஏலவேயுள்ள சபை எந்தப் பிரதேச சபை இடப்பரப்புக்காக அமைக்கப்பட்டதோ அந்தப் பிரதேச சபை இடப்பரப்பு எல்லைகளின் ஏதேனும் வேறுபடுத்துகையின் மேல், அவ்வாறு செய்வது உசிதமென அவருக்குத் தோன்றுகின்றபோதிலெல்லாம் ஏலவேயுள்ள ஏதேனும் பிரதேச சபையினைக் கலைத்து அத்தகைய ஏலவேயுள்ள சபைக்குப் பதிலாக அமைக்கப்பட வேண்டிய புதிய பிரதேச சபையினால் அது மாற்றீடு செய்யப்பட வேண்டுமெனப் பணிக்கலாம் ;

2–ஐ 038705–1,100 (95/12)

## 2012ம் ஆண்டின் 22ம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் தொடர்பான தேர்தல்கள் (திருத்த) சட்டம் பற்றிய அறிமுகம்

**மஞ்சுள கஜநாயக்க**

இலங்கையின் தேர்தல் நடைமுறையை திருத்துவதற்கான சக்திவாய்ந்த செயல் முறையை அண்மைக்காலத்தில் காணக்கூடியதாக உள்ளது. 1978ல் அமுலாக்கப்பட்ட அரசியல் அமைப்போடு அறிமுகம் செய்யப்பட்ட விகிதாசார தேர்தல் முறை மக்களின் செயற்பாட்டை மேலும் முன்னகர்த்தியமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஜனநாயக முறையிலான தேர்தல்கள் எப்போதும் நியாயமானதும் சட்டபூர்வமானதுமான ஓர் அரசாங்கத்தின் அடிப்படையாகக் கருதுவதில் எதுவிதத் தவறுமில்லை. இதற்கு அமைய தேர்தல் முறையின் நன்மை தீமைகள் பற்றி இடம்பெறும் பொதுவான கலந்துரையாடல் அதை அடியொட்டி ஏற்படும் சாதகமான திருத்தங்கள் தேர்தல் சட்டங்கள் அல்லது கட்டளைச் சட்டங்களில் சேர்த்துக்கொள்ளப்படுவது சுதந்திரமானதும் அமைதியானதுமான ஒரு சன சமூகத்தின் தொடர்ச்சியான அபிலாஷையாகும்.

இதற்கமைய 2010 உள்ளூராட்சி அதிகார சபைகளின் தேர்தல்கள் (திருத்த) சட்ட வரைபின் மூலம் மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆகிய மூன்று வகை உள்ளூராட்சி சபைகளுக்காக நடத்த வேண்டிய தேர்தல்களுக்கு ஏற்புடைய சட்டங்களில் பாரிய பல மாற்றங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த யோசனைகள் நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் ஒட்டுமொத்தமான தேர்தல் முறையையே திருத்தி அமைக்க வேண்டும் என்ற விசேட நிலைமையை கவனத்திற் கொண்டு நியமிக்கப்பட்ட இரண்டு குழு அறிக்கைகள் உண்டு. அதாவது,

இளைஞர்கள் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை[4] உள்ளூராட்சி மறு சீரமைப்புக்கள் பற்றிய விசாரணை ஆணைக்குழு அறிக்கை[5] என்பன இங்கு குறிப்பிடத்தக்கன.

இங்கு 1990ல் நியமனம் பெற்ற ஆணைக்குழு பொதுவாக இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆழமான அவதானிப்புக்களை முன்வைத்ததோடு இளைஞர்களின் அரசியல் உரிமையையும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தும் வகையில் பல பரிந்துரைகளை அறிமுகப்படுத்தியது. இளைஞர்களின் பங்களிப்புக்கு கூடுதலான அவகாசம் இளைஞர்களுக்கு வழங்கக் கூடிய வகையில் அவர்களுக்கான பங்கு அதாவது நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்யும் போது இளைஞர் சமூகத்திற்கு கூடிய அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்பது ஒரு முக்கியமான பரிந்துரையாகும். இதற்கு மேலதிகமாக உள்ளூராட்சி மறு சீரமைப்பு பற்றி ஆணைக்குழு தேர்தல் முறையில் மாற்றம் ஏற்பட வேண்டும் எனவும் அதனை உறுதிப்படுத்தும் வகையிலான அவதானிப்புக்கள், தீர்மானங்கள் மற்றும் பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. தேர்தல் சட்டங்களை திருத்தி அமைத்தல் என்ற உப தலைப்பின் கீழ் ஆணைக்குழு பின்வருமாறு குறிப்பிடுகிறது.

**தேர்தல் சட்டங்களை திருத்தி அமைத்தல்:**" மேற்படி பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் முழுமையாக திருத்தி அமைத்தல் வேண்டும் என சுட்டிக்காட்டப்படுகிறது. மேற்படி சட்டத்தை இல்லாதொழித்து பட்டின சபைகள், கிராம சபைகள் நிலவிய காலகட்டத்தில் இருந்த "உள்ளூராட்சி தேர்தல்கள் சட்டங்களில்" அவசியமான திருத்தங்களுடன் மீண்டும் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். இப் பந்தியில் முன்வைக்கப்படும்

---

[4]இளைஞர்கள் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை ஒரு பருவ வெளியீடாக 1990 மார்ச்சில் வெளியிடப்பட்டது. உள்ளூராட்சி மறு சீரமைப்புக்கள் பற்றிய விசாரணை ஆணைக்குழு அறிக்கை இல1 பருவ வெளியீடு 1999

[5]உள்ளூராட்சி மறு சீரமைப்புக்கள் பற்றிய விசாரணை ஆணைக்குழு அறிக்கை இல1 பருவ வெளியீடு 1999

யோசனைகளை மறு சீரமைப்பின் பின்பு செயற்படுத்தும் நோக்குடன் அவற்றை செய்ய வேண்டும் என பிரேரிக்கின்றோம் என குறிப்பிடப்படுகிறது.”

உள்ளூராட்சித் துறையை முழுமையாக இலக்கு வைத்துள்ளமையால் மேற்படி அவதானிப்புக்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

**தேர்தல் மறு சீரமைப்பு பற்றிய பாராளுமன்ற தெரிவுக்குழு:** அன்று அமுலில் இருந்த தேர்தல் சட்டங்களைக் கருத்திற் கொண்டு 2004 ஜனவரி 23ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கைக்கு அமைய மேற்படி தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது. அது 2006 ஏப்ரல் 04ம் திகதி நியமிக்கப்பட்டது. 32 உறுப்பினர்களைக் கொண்ட மேற்படி தெரிவுக் குழு தமது பரிந்துரைகளை 2007 யூன் மாதத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. இவ் அறிக்கையின் பரிந்துரைகளுள் மிக முக்கியத்துவம் வாய்ந்த பல பரிந்துரைகளை காணக்கூடியதாக இருக்கிறது.

- பாரளுமன்ற, உள்ளூராட்சி அதிகாரசபை தேர்தலின் போது முன்வைக்கப்பட்டவாறு 30% விகிதாசார பிரதிநிதித்துவ முறையையும், தொகுதி வாரியான பெரும்பான்மை வாக்குகளுக்கு அமையவும் (First past the post system) மீண்டும் உள்ளூராட்சி அதிகார சபை தேர்தல்களின் போது அறிமுகம் செய்தது.
- சிறுபான்மை இனங்களினதும் சமூகங்களினதும் ஜனநாயகப் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் குறிப்பிட்ட பிரதேசங்களில் அபிவிருத்தியை பன்முகப்படுத்துவதற்கும் முகாமைத்துவத்தையும் பொருதாரத் தேவைகளை நிறைவு செய்வதையும் அடிப்படையாகக் கொண்டு இன்றைய உள்ளூராட்சி

நிறுவனங்களில் நிலவும் மட்டுப்பாடுகளை மீண்டும் நிர்ணயித்தல்.

இந்த யோசனைகளை உள்ளடக்கிய பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் பரிந்துரைகளைக் கவனத்திற் கொண்டு பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது திருத்தம் 2012 ஒக்டோபர் மாதத்தில் முன்வைக்கப்பட்டது.

2012ம் ஆண்டின் 22ம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தல்கள் (திருத்த) சட்டத்திற்கு ஏற்புடையவாறு இச் சுருக்கமான குறிப்புரையின் அடிப்படை நோக்கம் இவ்வாறான திருத்தங்கள் பற்றி ஒரு சாராம்சத்தை முன்வைப்பதாகும்.

ஏற்கனவே முன்வைத்த விடயங்களின் பெறுபேறாக குறிப்பாக தினேஷ் குணவர்தன குழுவினால் வலியுறுத்தப்பட்டவாறு இத் திருத்தச் சட்டங்களுக்கு முன்பிருந்த நிலை பற்றி கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. அதே சமயம் உள்ளூராட்சி விசேட ஏற்பாடுகள் (திருத்த) சட்டமும் பாராளுமன்றத்தில் அங்கிகரிக்கப்பட்டது.[6]இது பற்றிய அறிமுகம் இக் கட்டுரையின் முதற் பகுதியில் ஸ்ரீயாணி விஜேசுந்தர எடுத்து விளக்கியுள்ளார்.

இந்த யோசனைகள் வரையப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது[7] அது பற்றிய பரந்து பட்ட மக்களின் பங்களிப்பை ஏற்படுத்துவதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் ஒரு சுருக்கமான விவரணத்தை வெளியிட்டது.[8] இவ்வாறு முன்வைக்கப்பட்ட உத்தேச திருத்தங்கள் பற்றி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சுருக்கமான சாராம்சம் பின்வருமாறு கூறுகிறது.

---

[6]2012ம் ஆண்டின் 21ம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள் சட்டம்)

[7]2010ம் ஆண்டு ஒக்டோபர்

[8]2010 உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்த) சட்ட வரைபு பற்றிய விபரங்கள்: பவானி பொன்சேக்கா, சுபிபி ஜயவர்தன, மிராக் ரஹீம், 2010 ஒக்டோபர் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் கொழும்பு

"அறுதிப் பெரும்பான்மை மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையையும் கலந்து தயாரிக்கப்பட்ட பிரதிநிதித்துவ முறையை அறிமுகம் செய்தல். வரைபில் உத்தேசிக்கப்பட்ட முக்கிய திருத்தமாகும். உள்ளூராட்சி அதிகார சபை பல தேர்தல் அலகுகளாக பிரிக்கப்படும் தேர்தல் தொகுதிகள் முறைக்கான வரைபு மீள அறிமுகப்படுத்தப்பட்டது. பல் தொகுதி பிரதிநிதித்துவம் இல்லாத பட்சத்தில் ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் ஒரு உறுப்பினர் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். விகிதாசார தேர்தல் முறையின் படி தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை திட்டவட்டமாகக் கூற முடியாது. உள்ளூராட்சி அதிகார சபையின் அறுதிப் பெரும்பான்மை பிரதிநிதித்துவத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளில் 30% உச்சம் விகிதாசார பிரதிநிதித்துவத்தின் கீழ் அமைய வேண்டும்."

ஒரு தேர்தலின் நேர்மைத்திறனை உறுதி செய்வதற்காக புல்லடி இடுதலும் வாக்குகளை எண்ணும் செயற்பாடும் வலுவூட்டப்பட வேண்டும். இத்தகைய முக்கிய குணாம்சங்கள் வரைபில் உள்ளடக்கப்பட்டிருந்தது. சாதகமான நிலைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தாலும் பின்வரும் ஏற்பாடுகள் உட்பட, வரைபில் அறிமுகம் செய்யப்பட்ட ஏனைய பல ஏற்பாடுகள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

- ❖ தேர்தல் தொகுதிகள் மற்றும் வேட்பாளர்களின் வெற்றிடங்கள் தொடர்பான விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்க வேண்டிய அதேசமயம், வாக்காளர்கள் இடைத் தேர்தலின்போது, தமது தெரிவை செய்வதற்கு பதிலாக, அரசியற் கட்சிகளின் செயலாளர்களும் சுயேட்சைக் குழுக்களின் தலைவர்களும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நியமனங்களைச் செய்யும் விசேட அதிகாரம் கொண்டவர்களாக இருக்கின்றனர்.
- ❖ உள்ளூராட்சி சபைகளின் தொகுதிகளை பிரிக்கும் நோக்கத்திற்காக எல்லை நிர்ணய நடவடிக்கைகளின் போது அமைச்சருக்கு அதி விசேட அதிகாரத்தை வழங்கக் கூடிய

எல்லை நிர்ணய நடைமுறை தொடர்பான வரைபு எடுத்துக் கூறுகின்றது.

- ❖ நகர சபை தலைவர் பதவியில் இருந்து விலகியதன் காரணமாக நிரப்பப்பட்ட வெற்றிடம் பின்னொரு சந்தர்ப்பத்தில் மீண்டும் வெற்றிடமாகும்போது உரிய உள்ளூராட்சி மன்றத்தை கலைத்து அமைச்சரால் ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படுவார்.

"இரு கட்சி முறைமையை மீண்டும் நிலைநாட்டுவதன் மூலம் சிறுபான்மை சமூகங்களின் கட்சிகளும் சுயாதீனக் குழுக்களும் தமது தேர்தல் தொகுதிகளைப் பாதுகாக்கும் அபாய வாய்ப்பினை உயர்த்தும் பிரதிநிதித்துவ ஜனநாயக முறை பாரதூரமான முறையில் பின் நோக்கி தள்ளுவதையே வரைபு உள்ளடக்கி உள்ளது. எல்லை நிர்ணய செயற்பாடு மூலமும், தேர்தல் நடைமுறை மூலமும் சிறுபான்மை இனங்கள் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்ற விசேட உறுதி மொழி கிடையாது. இதற்கு மேலதிகமாக நியமனப் பத்திரங்களை அமுல்படுத்தும் செயற்பாட்டில் பெண்களையும் இளைஞர்களையும் உள்வாங்குவதை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் இல்லை. அரசாங்கத்தின் மிக அண்மித்த அலகு உள்ளூராட்சி அதிகார சபை என்ற காரணத்தினால் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் தத்தமது தேர்தல் தொகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்கள் என்றோ அது தொடர்பான பொறுப்பை நடைமுறைப்படுத்துகின்றார்கள் என்பதற்கோ எதுவித உத்தரவாதமும் கிடையாது. வரைபு உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு புதியதொரு நடைமுறையை அறிமுகம் செய்தாலும் அது உள்ளூராட்சி அதிகார சபையை வலுவூட்டுவதை விட மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தை விரிவாக்குவதோடு இறுதி ஆய்வில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை பலவீனப்படுத்துகிறது.[9]"

இதற்கு மேலதிகமாக வேறு அமைப்புக்கள், நிறுவனங்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் வேறு துறைகளைச் சார்ந்த பல நபர்கள் இது பற்றி தமது கருத்துக்களை வெளிப்படுத்தி இருந்தனர். இவ்வாறாக அறிமுகப்படுத்திய திருத்தங்களைப் பற்றி விமர்சன

ரீதியான ஆய்வை மேற்கொள்வது இக்குறிப்பின் குறிக்கோள் அல்ல. ஆனால் இத்தகைய பல்வேறு தரப்பினர் மற்றும் தனிநபர்கள் ஊடாக முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் எதிர்ப்புக்கள் மற்றும் யோசனைகள் பற்றி அவ்வளவு அக்கறை இங்கு காட்டப்படவில்லை. என்பதை பொதுவாக குறிப்பிட வேண்டும். ஆனால் இன்று பாராளுமன்றத்தில் சட்டங்களை அங்கிகரிக்கும் போது ஓர் ஏகபோக இயல்புக்கு அமைய அதற்கு எதிரான கருத்துக்களை இட்டு சாதகமான பிரதிபலிப்பைக் காட்டுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்ட அரச தரப்பினர் எடுத்துக்காட்டியுள்ளனர் என்பதை இங்கு கவனத்தில்கொள்ள வேண்டும். இதற்கு சிறந்த உதாரணம் 2012 ஒக்டோபர் மாதம் 10ம் திகதி இது தொடர்பாக இடம்பெற்ற பாராளுமன்ற விவாதத்தின் போது எதிர்க்கட்சி கடைசி நேரத்தில் முன்வைத்த ஐந்து யோசனைகளில் மூன்று யோசனைகள் சில திருத்தங்களுடன் மூன்றாம் வாசிப்பின் போது உள்ளடக்கப்பட்டது.[10]

### குறிக்கோள்கள்

இத் திருத்தங்களின் பிரதான குறிக்கோள் இன்று நிலவும் தேர்தல் முறை மூலம் உருவாக்கப்பட்டுள்ள பிரச்சினைகளை அனுகுவதாகும். தேர்தல்களை ஒட்டிய வன்முறை நடவடிக்கைகள் தமது கட்சியைச் சார்ந்தவர்களுக்கு அப்பிரதேசங்களில் செயற்படும் அரசியல்வாதிகள் எதுவித வகைப்பொறுப்பும் இன்றி நடந்துகொள்ளுதல் அதாவது பெரும்பான்மை வாக்குகளை பெற முடியாமை காரணமாக அரசியல் ரீதியாக சிற்சில அரசியல் நெருக்கடிகளை எதிர்கொள்ளல் இங்கு முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டும். எவ்வாறாயினும். இங்கு முன்வைக்கப்பட்ட யோசனைகள் ஓரளவிற்கு விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் பலவீனங்களை தவிர்த்துள்ளது. அதேசமயம் பின்வரும் பலவீனங்கள்- சவால்கள் என்பவற்றை எதிர்கொள்ள வேண்டியும் உள்ளது.

---

[9]2010ம் ஆண்டின் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தல் (திருத்த) சட்ட வரைபு பற்றிய தகவல்கள் பக்கம் 1 பவானி ∴பொன்சேக்கா, சுபிபி ஜயவர்தன, மிராக் ர□ீம், 2010 ஒக்டோபர் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் கொழும்பு

[10](பாராளுமன்ற ஹன்சாட் அறிக்கை 2012 ஒக்டோபர் 10 புதன் கிழமை)

- **அறுதிப் பெரும்பான்மை விகிதாசாரப் பிரதிநிதித்துவம் ஆகியவற்றின் (FPP- PR System) கலவை** இத்தகைய ஒரு முறை உத்தேசிக்கப்பட்டாலும் இது பற்றிய திட்டவட்டமான சட்டபூர்வமான ஏற்பாடுகள் இன்மையால் எழுபது வீதம் அறுதிப் பெரும்பான்மையும் முப்பது வீதம் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையும் பயன்படுத்தப்பட்டு பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவர் என தெளிவாகக் குறிப்பிடப்பட்டாலும் அதற்கு உரிய சட்டங்களில் தெளிவின்மை காணப்படுகிறது.

- **சிறுபான்மை கட்சிகள் மீது பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துதல்**

  சிறுபான்மை இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்கு[11] திட்டவட்டமான பிரதிநிதித்துவம் உள்ள ஒரு மாகாணத்தின் இது பிரச்சினையாக அமையாவிட்டாலும், சிறுபான்மை பிரதிநிதித்துவம் ஓரளவிற்கு மாத்திரம் உள்ள வேறு பிரதேசத்தில், மேற்படி சிறுபான்மை கட்சிகள் உரிய பிரதிநிதித்துவத்தைப் பெறுவது பாரிய பிரச்சினையாக அமையலாம். அண்மைத்துவ இனங்களும் கலாசாரங்களும் நிலவும் ஒரு சமூகத்தில் சிறுபான்மை இனங்களைச் சார்ந்த கட்சிகளின் குரல் ஜனநாயகப் பிரதிநிதித்துவத்தின் கீழ் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. எனவே இத்தகைய குறைந்த பிரதிநிதித்துவம் இருப்பது அவ்வளவு சாதகமான நிலைமையாக அமையமாட்டாது.

- **நியமனப்பத்திரங்கள்**

  சுயாதீன குழுக்களுக்கு ஏற்புடைய பிணைப்பணம் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யும் போது 250 ரூபா 20,000ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. அரசியல்

[11] தமிழர் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பன

கட்சிகளோடு ஒப்புநோக்கும் போது சுயாதீனக் குழுக்களில் இருந்து இவ்வாறான அதிகப்பணத்தைப் பிணைப்பணமாகக் கோருவது புரிந்துகொள்ள முடியாத ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது. இது பற்றி குறிப்பிட்ட பாராளுமன்ற விவாதத்தின் போது அரசியல் கட்சிகள் முன்வைத்த எதிர்ப்பை அன்றைய ஹன்சாட் அறிக்கையை வாசிப்பதன் மூலம் அறியமுடியும்.[12]

- **இளைஞர்களினதும் பெண்களினதும் பிரதி நிதித்துவம்**

இலங்கை தென் ஆசிய பிராந்தியத்தில் மிகக் குறைந்த பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ள ஒரு நாடாகும். இப் பிரதிநிதித்துவம் பாகிஸ்தானில் 33% வழங்கப்பட்டுள்ளது. (உள்ளூராட்சி அதிகார சபைகள்) இலங்கையில் 2% தான் இது அமைந்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் செயற்பாட்டாளர்கள் இளைஞர் சமூகத்திற்காக 40% பங்கு (Youth Quota) எதிர் பார்த்தாலும் இத் திருத்தங்கள் மூலம் 25% ஆன பிரதிநிதித்துவமே வழங்கப்பட்டுள்ளது. இப் புள்ளி விபரங்கள் பற்றி வரைவிலக்கணம் செய்யும் போது சில அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள்[13] இதற்கு பல்வேறு வியாக்கியானங்களை கூறினர். இத் திருத்தங்களுக்கு அமைய இளைஞர் பிரதிநிதித்துவம் 25% ஆக மாத்திரம் அமைந்தது. அவசியமாயின் குறிப்பிட்ட அரசியல் கட்சிகளின் தலைமை மற்றும் சுயாதீனக் குழுக்களின் தலைமை 100% அதிகரிக்கலாம் என இங்கு கூறப்பட்டது. மேலோட்டமாகப் பார்க்கும் போது இது உண்மையாக இருக்கும் நடைமுறை அரசியலில் இது இவ்வாறு இடம்பெறப் போவதில்லை என எல்லோரும் அறிவர்.

---

[13]பாராளுமன்ற விவாதங்கள் (ஹன்சாட் அறிக்கை) 2010 ஒக்டோபர் 10

இரண்டு பிரிவுகளிலுமுள்ள இந்த சுருக்கமான பகுப்பாய்வு, இந்த புதிய திருத்தங்கள், அதே போன்று தங்களது நாளாந்த உத்தியோகப் பணிகளில் அத்தகைய ஒழுங்கு விதிகளால் நிர்வகிக்கப்படும் உள்ளூராட்சி அரசாங்க அதிகாரிகளின் தனிப்பட்ட அறிவை மேம்படுத்துதல் என்பவை தொடர்பான கலந்துரையாடலுக்கு பங்களிப்பதற்கான ஒரு கூட்டு முயற்சியாகும். உள்ளூராட்சி அதிகாரங்களுடன் பணியாற்றுகின்ற ஓர் நீண்ட வரலாற்றைக் கொண்ட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நல்லாட்சி நிகழ்ச்சித் திட்டம், உள்ளூராட்சி அரசாங்க முறைமைகளின், குறிப்பாக பிரதேச சபைகளின் முக்கியமான பணிகளை வலுப்படுத்தி முழுமையாக்குதல் என்பது ஓர் முழுமையான முறையில் சமூகத்துக்கு நன்மை பயப்பதோடு மக்களுக்கு நெருக்கமான இந்த மட்டங்களில் பங்குபற்றும் தன்மை கொண்ட ஜனநாயகத்தை முன்னேற்றும் எனவும் நம்புகிறது.